**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்</u>**

**முன்னிலை: திருமதி, சாதத்துனிஷா, பி.ஏ. பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 06ம் நாள் வியாழக் கிழமை

**<u>இடைநிலை மனு எண். 01/2025</u>**

**<u>IN</u>**

**<u>அசல் வழக்கு எண். 48/2025</u>**

மு.கோபால் .....மனுதாரர்/ வாதி

... எதிர் ...

மு.முத்தாயி மற்றும் 11 நபர்கள்

..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பாக கடந்த 25.10.2025–ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபொழுது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.D.பாபு, அவர்கள் முன்னிலையாகியும், 1,3,4 மற்றும் 6 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K.ராமையா, அவர்கள் முன்னிலையாகியும், 2, 12ம் பிரதிவாதிகள் தரப்பில் தோன்றாதரப்பினராகியும், இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது, மனுதாரர்கள் /வாதிகள் தரப்பில் இந்த மனுவும், இந்த வழக்கு முடியும்வரை எதிர்மனுதாரர்கள்/1–11 பிரதிவாதிகளோ அல்லது அவர்வகை ஆட்களோ முகவர்களோ அவரைச் சார்ந்தோர்களோ தாவா "ஆ" அட்டவணைச் சொத்துக்ககளில் யாதொரு புதிய கட்டுமானங்களும் செய்யக் கூடாதென தற்காலிக தடையாணையும், அதேபோல் இந்த மனு விசாரணை முடியும் வரை எதிரவரில்லா இடைக்கால தடையுத்தரவும் வழங்கி உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 உ.சே.பிரிவு 151ன் கீழ்

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2025.11.06 14:40:16 +0530

மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u>**

தாவா "ஆ" அட்டவணைச் சொத்துக்கள் தனது மற்றும் 1 முதல் 11 பிரதிவாதிகளின் முன்னோரான முருகன் (எ) முருகையா அவர்களுக்கு பூர்வீக பாத்தியமான சொத்துக்களாகும் என்றும், மேற்படி சொத்துக்களுக்கு மேற்படி முருகன் (எ) முருகையா பெயரில் பட்டா எண். 1395 பட்டா பதிவாகியுள்ளது என்றும், மேற்படி முருகன் (எ) முருகையா அவர்களும் கடந்த 15.06.2010-ம் தேதி இறந்துவிட்டார் என்றும், அவருக்கு முத்தாயி (1-ம் பிரதிவாதி) என்ற முதல் மனைவியும், மேற்படி முதல் மனைவியின் மூலம் பிறந்த தானும் மற்றும் 2 முதல் 7 பிரதிவாதிகளும் பிள்ளைகளாவோம் என்றும், மேற்படி முருகன் (எ) முருகையா இதற்கிடையில் இரண்டாம் தாரம் திருமணம் செய்துகொண்டு இரண்டாம் மனைவி மூலம் இந்த வழக்கின் 8 முதல் 11 பிரதிவாதிகள் பிறந்துள்ளனர் என்றும், ஆக கடந்த 15.06.2010-ம் தேதி இறந்த முருகன் (எ) முருகையா அவர்களுக்கு தானும் 1 முதல் 11 பிரதிவாதிகளும் வாரிசுகள் ஆவோம் என்றும், தாவா "ஆ" அட்டவணைச் சொத்துக்களில் முருகன் (எ) முருகையாவின் வாரிசென்ற முறையில் தனக்கு 12-ல் 1 பாக பாத்தியமுள்ளது என்றும், மேற்படி சொத்துக்களில் அவரவர் வசதிக்கேற்ப ஏற்கனவே தாவா "ஆ" அட்டவணைச் சொத்தில் 1-வது அயிட்ட சொத்தில் 10 மற்றும் 11 பிரதிவாதிகள் ஒரு சிறிய வீடு கட்டியுள்ளனர் என்றும், அதேபோல் 5-ம் பிரதிவாதியும் ஒரு சிறிய வீடு கட்டியுள்ளார் என்றும், ஆனால் இந்த 7-ம் பிரதிவாதி தற்பொழுது கடந்த 15.06.2025-ம் தேதி புதிதாக தாவா "ஆ" அட்டவணைச்சொத்தில் 2-வது அயிட்டச் சொத்தின் குறுக்கே பாதையை மறைக்கும்விதமாக புதிய வீடுகட்ட காண்பரிக்க முற்பட்டார் என்றும், அதனையும் தானும் தனது ஆட்களும் தடுத்து நிறுத்திவிட்டோம் என்றும், இந்நிலையில் இனிமேலும் தாவாச் சொத்துக்களை பொதுவில் வைத்துக்கொள்ள தான் பிரியப்படாததால் தாவாச் சொத்துக்களில் தனக்குள்ள

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2025.11.06 14:40:08 +0530

பாகத்தை பிரிவினை செய்து தனித்த சுவாதீனம் கொடுக்க தாஙன இந்த பிரதிவாதிகளிடம் கேட்டதற்கு 7-ம் பிரதிவாதியைத் தவிர இதர உள்ள அனைத்து பிரதிவாதிகளும் பிரிவினை செய்து கொடுக்க தயாராக உள்ளநிலையில், இந்த 7-ம் பிரதிவாதி மட்டும் தனக்கு வீடு கட்டவேண்டும் என்றும் ,அந்த சொத்தை தனக்கு மட்டில் கொடுக்கவேண்டும் என்றும் கூறி பாகப்பிரிவினை செய்துகொடுக்க முன்வராமல் இருந்துவருகிறார் என்றும், அதனால் பாகப்பிரிவினை தனித்த சுவாதீனம், நிரந்தர தடையாணை பரிகாரங்கள் கோரி இந்த வழக்கை தான் தாக்கல் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கு முடியும்வரை தாவா "ஆ" அட்டவணைச் சொத்துக்களை எதிர்மனுதார்கள்/1 முதல் 11 பிரதிவாதிகள் யாதொரு புதிய கட்டுமாண-ங்களும் செய்துவிட்டால் தனக்கு தாவாச் சொத்துக்களில் கிடைக்க வேண்டிய 12-ல் 1 பாகம் பிரிவினைசெய்து சுவாதீனமடைவதில் தேவையற்ற கால, பண விரையம் ஏற்பட்டு பெருத்த கஷ்ட நஷ்டமேற்படும் என்றும், இந்த வழக்கு முடியும்வரை தாவா "ஆ" அட்டவணைச்சொத்துக்களில் இந்த எதிர்மனுதார்கள்/1 முதல் 11 பிரதிவாதிகள் யாதொரு புதிய கட்டுமாணங்களும் செய்யக்கூடாதென தற்காலிக தடையாணை பரிகாரமும், அதேவிதமாக இந்த மனு விசாரணை முடியும்வரை எதிர்வரில்லா இடைக்கால தடையுத்தரவும் வழங்கி உத்திரவாகாதபட்சத்தில் தனக்கு பணத்தால் ஈடுசெய்ய இயலாத பெருத்த கஷ்ட நஷ்டமேற்படும் என்றும், எனவே, இந்தவழக்கு முடியும்வரை தாவா "ஆ" அட்டவணைச்சொத்துக்களில் யாதொரு புதிய கட்டுமாணங்களும் செய்யக்கூடாதென தற்காலிக தடையாணை பரிகாரமும், அதே விதமாக இந்த மனு விசாரணை முடியும்வரை எதிர்வரில்லா இடைக்கால தடையுத்தரவும் வழங்கி உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2025.11.06 14:40:00 +0530

**<u>5ம் பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரை:( 5ம் பிரதிவாதி தாக்கல் செய்யும் எதிர்வழக்குரையை 1 மற்றும் 3,4 மற்றும் 6 முதல் 11 பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்கிறார்கள்)</u>**

தாவாவில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண்கள் மற்றும் இன்னும் தாவாவில் சேர்க்கப்படாத சர்வே எண்கள் ஆகியவற்றை பொறுத்து 1–ம் பிரதிவாதியின் கணவரும், வாதியின் தந்தையுமான முருகன் என்ற முருகையா உயிருடன் இருந்த காலத்திலேயே தன்னுடைய வாரிசுகளுக்கும் தன்னுடைய சகோதரர் 12–ம் பிரதிவாதி கணேசனின் தந்தை சுப்பையா என்பவருக்கும் எந்தநெந்த சொத்துக்கள் யார்யார் எதை எதை அனுபவிக்க யார்யார் வேண்டும் எதைஎதை சுவாதீனத்திலும், அனுபவத்திலும், உரிமையிலும் வைத்துக்கொண்டு வருவாய் துறை ஆவணங்களை அவர்களுடைய பெயருக்கு மாற்றிக்கொள்ளவேண்டும் என்று ஊர் முக்கியஸ்தர்களை வைத்து வாய்மொழியாக இந்த வாதி பிரதிவாதிகளுக்கு பிற்காலத்தில் எந்தவித பிரச்சனையும் வந்துவிடகூடாது என்ற அடிப்படையில் கடந்த 20 வருடங்களுக்கு முன்பே பிரித்து கொடுத்துவிட்டு அவர் இறந்துவிட்டார் என்றும், உண்மை என்னவென்றால், தாவா "ஆ" அட்டவணைச் சொத்தில் சர்வே எண். 315/3–ல் 2–ம் பிரதிவாதி இந்த வாதி, 10–ம் பிரதிவாதி, 4–ம் பிரதிவாதி, 11–ம் பிரதிவாதி ஆகியோர்கள் தனித்தனியாக வீடுகட்டி தங்களது தனித்த சுவாதீனத்திலும், உரிமையிலும், அனுபவத்திலும் இருந்துவருகிறார்கள் என்றும், ஆனால் மேற்படி சர்வே எண்ணில் உள்ள பட்டாவனது நாளது தேதிவரை காலம் சென்ற ஆண்டி மகன் முருகன் (எ) முருகையா என்பவர் பெயரில் வருவாய்துறை ஆவணங்களில் இருந்து வருகிறது என்றும், தாவா "ஆ" அயிட்டச் சொத்தான சர்வே எண். 315/5 –ல் 5–ம் பிரதிவாதி அர்சுணன் என்பவரும் வீடுகட்டி குடியிருந்து வருகிறார் என்றும், மீதி காலியிடத்தில் 7–ம் பிரதிவாதி தங்கையா என்பவர் தற்போது வீடுகட்டி தற்போது முடியும் தருவாயில் இருந்து வருகிறது என்றும், மேற்படி சர்வே எண்ணில் மற்ற பிரதிவாதிகளுக்கோ, வாதிக்கோ எந்தவிதமான பாதையோ, புலக்கஸ்தலமோ கிடையாது என்றும், ஆனால் வாதி, இந்த 7–ம் பிரதிவாதியை வீடுகட்டி முடிக்கவிடாமல் பல்வேறு இடஞ்சல்களை செய்து இறுதியில் இலுப்பூர் காவல் நிலையத்தில் வீடுகட்டக்கூடாது என்று இந்த 7– ம் பிரதிவாதி மீதும் அவர் மனைவி

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2025.11.06 14:39:53 +0530

மீதும் குற்றப்புகார் கொடுத்திருந்தார் என்றும், மேற்படி குற்றபுகாரை விசாரித்த காவல்துறை இது அண்ணன், தம்பி பாகப்பிரச்சனை நீங்களே சுமுகமாக தீர்த்துக்கொள்ளுங்கள் என்று வாதிக்கு நல்ல புத்திமதியை சொல்லி அனுப்பி வைத்தார்கள் என்றும், அதன் பிறகு வாதி இந்த 7–ம் பிரதிவாதியை உன்னை வீடுகட்டவிடாமல் நான் தடுத்துவிடுகிறேன் சவால் விட்டுச்சென்று இந்த பாகப்பிரிவினை வழக்கை உண்மைக்கு புறம்பான சங்கதிகளை சொல்லி தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்த வாதிக்கு தாவாச் சொத்து அருகில் சர்வே எண். 315/35 0.01.0 ஏர்ஸில் தார்சு வீடுகட்டி குடியிருந்து வருகிறார் என்றும், அதனை இந்த தாவாவில் சேர்க்கவில்லை என்றும், மேலும் சர்வே எண். 315/36 2–ம் பிரதிவாதி சண்முகத்தின் மனைவி வள்ளிக்கண்ணு பெயரில் 0.01.0 ஏர்ஸில் தார்சு வீடுகட்டி குடியிருந்து வருகிறார் என்றும், அதனையும் வழக்கு சொத்துவிபரத்தில் சேர்க்கவில்லை என்றும், மேலும் சர்வே எண். 315/4 0.1.50 ஏர்ஸ் சொத்தில் இவ்வழக்கில் 12–ம் பிரதிவாதி கணேசனின் தந்தை ஆண்டி மகன் சுப்பையா என்பவர் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றும், மேற்படி சொத்தினையும் வாதி தாக்கல் செய்துள்ள இந்த தாவாவில் சேர்க்கப்படவில்லை என்றும், மேலும் தாவாவில் 315/39 நல்லுச்சாமி மனைவி சரஸ்வதி மேலும் 315/40 முருகன் மனைவி நல்லம்மாள், 315/41 பால்ராஜ் மனைவி சித்ரா ஆகிய சொத்துக்களும் சேர்க்கப்படாத தாவாவில் மேற்படி சொத்துக்களும் ஆகிய தோசத்திற்காக மேற்படி தாவாவும் தள்ளுபடிக்கு அருகதை உடையது என்றும், தாவா "அ" அட்டவணைச் சொத்தில் சர்வே எண். 302/3A2–ல் புஞ்சை ஹெக்டேர் 1.26.50 ஏர்சும் இந்த வாதி மற்றும் 1 முதல் 11 பிரதிவாதிகளுக்கு மட்டுமே பாத்தியப்பட்ட பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப சொத்தாகும் என்றும், மேற்படி சர்வே எண்ணில் 12–ம் பிரதிவாதிக்கு உரிய பாகச் சொத்தான 1 ஏக்கர் சொத்தினை கடந்த 18–05–2006–ம் தேதி அன்று 12–ம் பிரதிவாதியும் இந்த வாதி மற்றும் 1 முதல் 11 பிரதிவாதிகளின் தந்தையுமான முருகன் என்ற முருகையா என்பவரும் சேர்ந்து இந்த 12–ம் பிரதிவாதி பாகத்தினை சின்னத்துரை என்பவருக்கு விற்பனை செய்து அதுவும் தற்போது பல்வேறு நபர்கள் பெயரில் ஆவணங்கள் அவர்களுடைய அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்றும், எனவே 12–ம் பிரதிவாதி அவருக்குறிய பாகத்தை ஏற்கனவே

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2025.11.06 14:39:45 +0530

விற்றுவிட்டதால் மேற்படி சர்வே எண்ணை பொறுத்து அவர் பாகம் கேட்க அருகதை அற்றவர் ஆவார் என்றும், இந்த உண்மைகளை மறைத்து வாதி 12–ம் பிரதிவாதியுடன் சேர்ந்து கூட்டு சதி ஆலோசனை செய்து மற்ற பிரதிவாதிகளுக்கு சேரவேண்டிய பாகத்தினை மோசடி செய்யவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மேற்படி சர்வே எண்ணில் 12–ம் பிரதிவாதிக்கு பாகம் இருப்பதுபோல மேற்படி தாவா தாக்கல் செய்துள்ளது இந்த பிரதிவாதிகளை ஒருபோதும் கட்டுப்படுத்தாது என்றும், இதன் காரணமாகதான் 12–ம் பிரதிவாதி மேற்படி தாவாவில் எந்தவித எதிர் கட்சியும் செய்யாமல் ஒரு தலைபட்ச உத்தரவாகியுள்ளார் என்றும், இதிலிருந்தே வாதியும், 12–ம் பிரதிவாதியும் கூட்டு சதிஆலோசனை செய்து மேற்படி தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்பது தெளிவாக தெரியவரும் என்றும், தாவா "அ" அட்டவணைச் சொத்தில் சர்வே எண். 283/1G சுமார் 0.11.0 ஏர்ஸ் சொத்தானது தவறான முறையில் கணக்கீடு செய்து மேற்படி தாவாவினை வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், உண்மையான பாகம் என்பது வாதி மற்றும் 1 முதல் 11 பிரதிவாதிகளின் தந்தை முருகன் என்ற முருகையா என்பவருக்கும் அவருடைய சகோதாரர் சுப்பையா என்பவருக்கும் சரிபாகமாக கிடைக்க வேண்டிய சொத்தாகும் என்றும், உண்மையை மறைத்து வாதி பொய்யான விபரங்களை கண்டு தாக்கல் செய்துள்ளார் என்றும், இவ்வழக்கில் 3 மற்றும் 6–ம் பிரதிவாதிகளுக்கு வாதியோ அல்லது மற்ற பிரதிவாதிகளோ எந்தவொரு சொத்தையும் பாகமாக அவர்கள் பெயருக்கு இதுநாள் வரை கொடுக்கவில்லை என்றும், அவருடைய தந்தையார் முருகன் என்ற முருகையா உயிருடன் இருந்த காலத்தில் நத்தம் வீட்டுமனைச் சொத்துக்களை ஆண்மகன்களாகிய நீங்கள் அனைவரும் பிரித்துக்கொள்ள வேண்டும் என்றும், 3 மற்றும் 6–ம் பிரதிவாதிக்கு வழக்கு "அ" அட்டவணைச் சொத்தில் சர்வே எண். 302/3A2–வில் இருவருக்கும் மற்றவர்களுக்கு ஒதுக்கும் பாகங்களை போல பாகம் பிரித்துக்கொடுக்கவேண்டும் என்று ஊர் முக்கியஸ்தர் முன்னிலை வாய்மொழியாக சொல்லியுள்ளார் என்றும், அதனையும் இந்த வாதி மறைத்து மேற்படி தாவாவினை பொய்யான முகாந்திரங்களை சொல்லி மேற்படி தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவாவில் சொல்லப்பட்டுள்ள வழக்கு மூலம் தவறு என்றும், 7–ம் பிரதிவாதி யாருடைய தூண்டுதலின்றி, யாருடைய தலையிடுமின்றி அமைதியான

M
SATHATHUNISHA
Digitally signed by M
SATHATHUNISHA
Date: 2025.11.06
14:39:39 +0530

முறையில் வீடுகட்டி வருகிறார் என்றும், இதனை வேண்டாத நபர்கள் மூலம் தொந்தரவு செய்தும், இந்த தாவாவை பொய்யான காரணங்களை சொல்லி தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதியின் வழக்கு சட்டப்படி நிலைநிற்க்கத்தக்கதல்ல. தள்ளுபடிக்கு அருதை உடையது என்றும், வாதி சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை நாடவில்லை என்றும், தேவைப்படிமாயின் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் உரிமையை இந்த பிரதிவாதிகள் தக்கவைத்துக்கொள்கிறார்கள் என்றும், எனவே வாதி தாக்கல் செய்துள்ள வழக்கினை இந்த பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தரப்பு ஆவணங்களாக ம.சா.ஆ1 முதல் ம.சா.ஆ 4 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களாக எ.சா.சா.ஆ 1 முதல் எ.மா.சா.ஆ 6 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதேயாகும்.

**<u>3. பிரச்சனைக்கான தீர்வு</u>**

1) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தரப்பில் இந்த மனுவும் மனு ஆ அட்டவணைச் சொத்துக்களில், இந்த வழக்கு முடியும் வரை, எதிர்மனுதாரர்கள் யாதொரு புதிய கட்டுமானங்களும் செய்யக்கூடாது என தற்காலிக தடையாணை பரிகாரம் வழங்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மேலும், மனுதாரர் தரப்பில் மனு "ஆ" அட்டவணைச் சொத்துக்கள் தனது மற்றும் 1 முதல் 11 எதிர்மனுதாரர்களின் முன்னோரான முருகன் (எ) முருகையா அவர்களுக்கு பூர்வீக பாத்தியமான சொத்துக்களாகும் என்றும், மேற்படி சொத்துக்களுக்கு மேற்படி முருகன் (எ) முருகையா பெயரில் பட்டா எண். 1395 பட்டா பதிவாகியுள்ளது என்றும், மேற்படி முருகன் (எ) முருகையா அவர்களும் கடந்த 15.06.2010−ம் தேதி இறந்துவிட்டார் என்றும், அவருக்கு முத்தாயி (1−ம் பிரதிவாதி) என்ற முதல் மனைவியும், மேற்படி முதல் மனைவியின் மூலம் பிறந்த தானும் மற்றும் 2 முதல் 7 எதிர்மனுதாரர்களும்

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2025.11.06 14:39:32 +0530

பிள்ளைகளாவோம் என்றும், மேற்படி முருகன் (எ) முருகையா இதற்கிடையில் இரண்டாம் தாரம் திருமணம் செய்துகொண்டு, இரண்டாம் மனைவி மூலம் இந்த வழக்கின் 8 முதல் 11 எதிர்மனுதாரர்கள் பிறந்துள்ளனர் என்றும், ஆக கடந்த 15.06.2010–ம் தேதி இறந்த முருகன் (எ) முருகையா அவர்களுக்கு தானும் 1 முதல் 11 எதிர்மனுதாரர்களும் வாரிசுகள் ஆவோம் என்றும், தாவா "ஆ" அட்டவணைச் சொத்துக்களில் முருகன் (எ) முருகையாவின் வாரிசென்ற முறையில் தனக்கு 12–ல் 1 பாக பாத்தியமுள்ளது என்றும், மேற்படி சொத்துக்களில் அவரவர் வசதிக்கேற்ப ஏற்கனவே தாவா "ஆ" அட்டவணைச் சொத்தில் 1–வது அயிட்ட சொத்தில் 10 மற்றும் 11 எதிர்மனுதாரர்கள் ஒரு சிறிய வீடு கட்டியுள்ளனர் என்றும், அதேபோல் 5–ம் எதிர்மனுதாரரும் ஒரு சிறிய வீடு கட்டியுள்ளார் என்றும், ஆனால் இந்த 7–ம் எதிர்மனுதாரர் தற்பொழுது கடந்த 15.06.2025–ம் தேதி புதிதாக தாவா "ஆ" அட்டவணைச்சொத்தில் 2–வது அயிட்டச் சொத்தின் குறுக்கே பாதையை மறைக்கும்விதமாக புதிய வீடுகட்ட காண்பரிக்க முற்பட்டார் என்றும், அதனையும் தானும் தனது ஆட்களும் தடுத்து நிறுத்திவிட்டோம் என்றும், இந்நிலையில் இனிமேலும் தாவாச் சொத்துக்களை பொதுவில் வைத்துக்கொள்ள தான் பிரியப்படாததால் தாவாச் சொத்துக்களில் தனக்குள்ள பாகத்தை பிரிவினை செய்து தனித்த சுவாதீனம் கொடுக்க தான் இந்த எதிர்மனுதாரர்களிடம் கேட்டதற்கு 7–ம் எதிர்மனுதாரரைத் தவிர இதர உள்ள அனைத்து எதிர்மனுதாரர்களும் பிரிவினை செய்து கொடுக்க தயாராக உள்ளநிலையில், இந்த 7–ம் எதிர்மனுதாரர் மட்டும் தனக்கு வீடு கட்டவேண்டும் என்றும் ,அந்த சொத்தை தனக்கு மட்டில் கொடுக்கவேண்டும் என்றும் கூறி பாகப்பிரிவினை செய்துகொடுக்க முன்வராமல் இருந்துவருகிறார் என்றும், அதனால் பாகப்பிரிவினை தனித்த சுவாதீனம், நிரந்தர தடையாணை பரிகாரங்கள் கோரி இந்த வழக்கை தான் தாக்கல் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கு

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2025.11.06 14:39:24 +0530

முடியும்வரை தாவா "ஆ" அட்டவணைச் சொத்துக்களை எதிர்மனுதார்கள்/1 முதல் 11 பிரதிவாதிகள் யாதொரு புதிய கட்டுமானங்களும் செய்துவிட்டால், தனக்கு தாவாச் சொத்துக்களில் கிடைக்க வேண்டிய 12–ல் 1 பாகம் பிரிவினைசெய்து சுவாதீனமடைவதில் தேவையற்ற கால, பண விரையம் ஏற்பட்டு பெருத்த கஷ்ட நஷ்டமேற்படும் என்றும், எனவே இந்த வழக்கு முடியும்வரை எதிர்மனுதாரர்கள்/1–11 பிரதிவாதிகளோ அல்லது அவர்வகை ஆட்களோ முகவர்களோ அவரைச் சார்ந்தோர்களோ தாவா "ஆ" அட்டவணைச் சொத்துக்களில் யாதொரு புதிய கட்டுமானங்களும் செய்யக் கூடாதென தற்காலிக தடையாணையும், கோரப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர் தரப்பில் மனுச் சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களைப் பொறுத்து ஏற்கனவே வாய்மொழியாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு பிரித்துக்கொடுக்கப்பட்டுவிட்டது என்றும், இந்நிலையில் மனு ஆ அட்டவணைச் சொத்தில் சர்வே எண் 315/3ல், மனுதாரரும், 2, 4,10, 11 ஆகிய எதிர்மனுதாரர்களும் தனித்தனியாக வீடு கட்டி அனுபவம் செய்து வருவதாகவும், சர்வே எண் 315/5ல் 5ம் எதிர்மனுதாரரும், வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றும், 7ம் எதிர்மனுதாரர் தற்போது வீடு கட்டி வரும் சர்வே எண்ணில் எந்த வித பாதையும் இல்லை என்றும், 7ம் எதிர்மனுதாரர் வீடு கட்டி முடிக்காவிட்டால் அவருக்கு பல்வேறு இடைஞ்சல் ஏற்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

4) இதனைக் குறித்து பரிசீலனை செய்தததில், மேற்படி மனுதாரர் தரப்பில் இந்த அசல் வழக்கானது பாக பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ள நிலையில், மனு ஆ அட்டவணைச் சொத்து மனுதாரர், எதிர்மனுதாரர்களின் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறதா என்பது முக்கிய சங்கதியாக உள்ள நிலையில், மனுதாரரரே தனது மனுவில் மனு ஆ அட்டவணைச் சொத்தில் 1வது அயிட்டச் சொத்தில் 10 மற்றும் 11 எதிர்மனுதாரர்கள் ஒரு சிறிய வீடு கட்டியுள்ளனர் என்றும், அதே போல் 5ம் எதிர்மனுதார் ஒரு சிறிய வீடு கட்டியுள்ளார் என்று கூறியுள்ளதைப் பார்க்கும்பொழுது, மனு ஆ அட்டவணைச் சொத்து உண்மையில் மனுதாரர்,

M SATHATHUNISHA Digitally signed by M SATHATHUNISHA Date: 2025.11.06 14:39:16 +0530

எதிர்மனுதாரர்களின் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது என்பது முதல் தோற்றமாக தெரியவரவில்லை என இந்நீதிமன்றம் கருதகிறது.

மேலும், 7ம் எதிர்மனுதாரர் மனு ஆ அட்டவணைச் சொத்தில் 2வது அயிட்டச் சொத்தின் குறுக்கே பாதையை மறைக்கும் விதமாக புதிய வீடு கட்ட காண் பறிக்க முற்பட்டார் என கூறியுள்ள நிலையில், அவ்வாறு மனு ஆ அட்டவணைச் சொத்தில் பாதை உள்ளதா என்பதைக் குறித்தும், அந்த பாதையை மறைக்கும் விதமாக புதிய வீடு கட்டி வருகிறாரா என்பதைக் குறித்தும், இந்த அசல் வழக்கில், இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களின் மூலம் முழுமையான வழக்கு விசாரணையின் போது மட்டுமே தெளிவாக தீர்வு காண இயலும் என இந்நீதிமன்றம் கருதுவதால் மனுதாரர் தரப்பில் மனு ஆ அட்டவணைச் சொத்தில் யாதொரு புதிய கட்டுமானங்களும் எதிர்மனுதாரர்கள் செய்யக்கூடாது என மனுதாரர் கோரிய பரிகாரம் வழங்குவது உசிதமாக இருக்காது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,**

இம்மனு அசல் வழக்கிற்கு குந்தகம் இல்லாமல் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 06-ம் நாள் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2025.11.06 14:39:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி – இல்லை

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | -- | பட்டா எண்.1022 10(1) க்கான கணினி நகல் |
| ம.சா.ஆ.2 | -- | பட்டா எண்.1395க்கான கணினி நகல் |
| ம.சா.ஆ.3 | --- | பட்டா எண்.1395க்கான கணினி நகல் |
| ம.சா.ஆ.4 | --- | வாரிசு சான்றிதழ் |

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி – இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | -- | பட்டா எண்.1567க்கான வாதி பெயரில் உள்ள கணினி சிட்டா |
| எ.ம.சா.ஆ.2 | | பட்டா எண்.1568க்கான 2ம் பிரதிவாதி மனைவி பெயரில் உள்ள கணினி சிட்டா |
| எ.ம.சா.ஆ.3 | --- | பட்டா எண்.1308க்கான 12ம் பிரதிவாதி பெயரில் உள்ள கணினி சிட்டா |
| எ.ம.சா.ஆ.4 | --- | பட்டா எண்.1022க்கான கணினி சிட்டா |
| எ.ம.சா.ஆ.5 | | பட்டா எண். 771க்கான கணினிசிட்டா |
| எ.ம.சா.ஆ.6 | | வில்லங்க சான்று கணினி நகல் |

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2025.11.06 14:39:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.